**ஆண் :** நீ இன்றி நானும்
இல்லை என் காதல்
பொய்யும் இல்லை வழி
எங்கும் உந்தன் முகம் தான்
வலி கூட இங்கே சுகம் தான்

**ஆண் :** தொடுவானம் சிவந்து
போகும் தொலை தூரம் குறைந்து
போகும் கரைகின்ற நொடிகளில்
நான் நெருங்கி வந்தேனே

**ஆண் :** இனி உன்னை பிரிய
மாட்டேன் தொலை தூரம்
நகர மாட்டேன் முகம் பார்க்க
தவிக்கிறேன் என் இனிய பூங்காற்றே

**ஆண் :** ஒ சாந்தி சாந்தி
ஒ சாந்தி என் உயிரை
உயிரை நீ ஏந்தி ஏன்
சென்றாய் சென்றாய்
எனை நீங்கி நான் வந்தேன்
வந்தேன் உன்னை தேடி

**ஆண் :** நீ இன்றி நானும்
இல்லை என் காதல்
பொய்யும் இல்லை
உன்னை காணும் நேரம்
வருமா இரு கண்கள்
மோட்சம் பெறுமா

**ஆண் :** விரலோடு விழியும்
வாடும் விரைகின்ற காலும்
நோகும் இருந்தாலும் வருகிறேன்
உன் மடியில் நான் தூங்க
எனை வந்து உரசும் காற்றே
அவளோடு கனவில் நேற்றே

**ஆண் :** கைகோர்த்து
நெருங்கினேன் கண்
அடித்து நீ ஏங்க

**ஆண் :** { ஒ சாந்தி சாந்தி
ஒ சாந்தி என் உயிரை
உயிரை நீ ஏந்தி ஏன்
சென்றாய் சென்றாய்
எனை நீங்கி நான் வந்தேன்
வந்தேன் உன்னை தேடி } (2)

**ஆண் :** …………………………………